புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# சிலப்பதிகாரம் காட்டும் சமய நல்லிணக்கம்

முனைவர் ம.வித்யா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி.

## முன்னுரை

சமயங்கள் மனிதனின் மனதைப் பண்படுத்தி அதன்மூலம் உலக நன்மைக்கு வழிகாட்டும் நோக்கில் உருவாக்கப்பட்டன. ஆனால், சமயங்களின் பெயரால் பல்வேறு சிக்கல்களுக்கும், வன்முறைகளுக்கும் மனித சமூகம், தற்போது ஆளாகிவருகிறது. சமயங்களுக்கு இடையேயான வாதங்களை இலக்கியங்கள் பதிவு செய்ததைப் போல, சமயப் பொறையையும் பதிவு செய்ய தவறிவிடவில்லை. ஆகவே, சிலப்பதிகாரம், ஒற்றுமைக் காப்பியமாக மட்டுமல்லாமல், சமய நல்லிணக்க காப்பியமாகவும் திகழ்கிறது. பல்வேறு சமயத்தைச் சார்ந்த கதை மாந்தர்கள் முதன்மைக் கதாப்பாத்திரங்களோடு இணைந்து காப்பியம் முழுவதும் பயணிக்கின்றனர். ஆயினும் சமய வேறுபாடு காட்டி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளாமல், ஒருவர் மற்றொருவர் கருத்துக்கு மதிப்பளிப்பது ஆறுதல் அளிக்கிறது. அந்த வகையில் சிலம்பில் இடம்பெற்றிருக்கும் சமூக நல்லிணக்கக் கருத்துகளை கோடிட்டுக் காட்டுவதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

## தெய்வங்களும், திருவிழாக்களும்

சிலம்பில் சிவன், முருகன், பலதேவன் , திருமால், இந்திரன், திவாகரர், உருத்திரர் உள்ளிட்ட நால்வகைத் தேவர்கள், அருகர், புத்தர் உள்ளிட்டோருக்கு கோயில் இருந்த செய்தியை சிலம்பு சுட்டுகிறது. (இந்திர விழா ஊரடுத்த காதை , 170-175 ) . இத்தகு தன்மையால் புகார் நகரம் எப்போதும விழாக்கோலம் கொண்டு சிறப்புடன் திகழ்ந்தது. இத்தகைய விழாக்களுள் இந்திர விழா பற்றி இரட்டைக் காப்பியங்கள் இரண்டும் பேசுகின்றன.

" பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க " - ( இந்திர விழா ஊரடுத்த காதை, 72-74 )

இந்த விழாக்கள் பசி, பிணி, பகை நீங்கி மழையும் வளனும் சுரக்க வேண்டும் என்னும் நோக்கத்திற்காகக் கொண்டாடப்பட்டது.

## தேவந்தி

கண்ணகியின் தோழியான தேவந்தி, கண்ணகியின் கனவினைக் கேட்டு, நீ சென்று சோம குண்டம், சூரிய குண்டம் என்னும் பொய்கைகளில் நீராடி காமனை வழிப்பட்டால் கணவனைப் பிரியாது என்றும் வாழ்வாய் என்று கூறுகிறாள் . அதற்கு கண்ணகி பீடன்று என்று மறுத்து விடுகிறாள். ( கனாத்திறம் உரைத்த காதை 60-65 ) . இருப்பினும் காப்பியத்தின் இறுதியில் கண்ணகிக் கோட்டத்திற்கு வழிபாடு செய்பவளாக மாறுகிறாள்.

" நித்தல் விழா அணி நிகழ்க என் று ஏவி
தேவந்திகையைச் செய்க என்று அருளி " - வஞ்சிக் காண்டம் – 150- 155

பாசண்ட சாத்தனைக் கணவனாக அடைந்து அவனது தெய்வத் தன்மை அறிந்து அவனை வழிப்பட்ட தேவந்தி இறுதியில் தனது தோழியான கண்ணகி கோயிலில் புசை செய்கிறாள். தன் வாழ்வில் மறக்க முடியாத இருவரை வழிப்பட்டு வாழ்க்கை நடத்துகிறாள். அச்சம் தான்

வழிபாடு தோன்ற காரணமாயிற்று என்னும் கருத்தை தேவந்தி கதாப்பாத்திரம் கேள்வி கேட்கிறது.

கவுந்தியடிகள்

மதுரையில் இருக்கும் அருக தேவனின் அடிதொழ கண்ணகி மற்றும் கோவலனோடு கவுந்தியடிகளும் செல்கிறார். காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றைக் வெற்றிக்கொண்ட அருகதேவனின் மொழிகளைத் தவிர வேறு சொல்லை என் செவிகள் கேட்காது என்று சமண சமயத்தின் மீது தீரா பக்தி கொண்டிருக்கிறார். மதுரையில் புறஞ்சேரி என்னும் பகுதிக்குச் சென்று,

" அறத்துஉறை மாக்கட்கு அல்ல து இந்த

புறச்சிறை இருக்கை பொருந்தாது ஆகலின்" - (மதுரைக் காண்டம் – 317)

என்று கூறி மாதரியிடம் அவர்களை அடைக்கலமாக விட்டுச் செல்கிறாள். இங்கே சமணசமயத்தின் பந்தத்தில் இருந்து விடுபடும் கொள்கையை கவுந்தியடிகள் கொண்டிருப்பினும், கண்ணகியை கற்பையே அணிகலனாக கொண்டிருக்கும் இந்த தெய்வத்தைத் தவிர சிறந்த தெய்வத்தை யான் கண்டதில்லை என்று கண்ணகியைப் புகழ்கிறார்.. கோவலன் கொலையுண்டதைக் கேள்வியுற்று, உண்ணாநோன்பு இருந்து உயர் துறக்கிறார். ( நீர்ப்படைக் காதை – 82-84 )

மாடல மறையோன்

சிலம்பில் நான்கு வேதங்களை உணர்ந்த அந்தணனாகிய மாடலன் என்னும் மறையோன் அனைவரின் வரலாற்றையும் நிகழ்காலம், இறந்த காலம், எதிர்காலம் என்ற நிலையில் நினைவுப்படுத்தும் முக்கியப் கதாப்பாத்திரம் ஆகும். அடைக்கல காதையில், கோவலன், கருணை மறவனாகவும், செல்லாச் செல்வனாகவும், இல்லோர் செம்மலாகவும் விளங்கிய செய்தியை எடுத்துக் கூறி, இப்பிறவியில் நீ நல்வினையே ஆற்றிய போதிலும், நீ படும் துன்பத்திற்கு உன் முற்பிறப்பு வினை காரணமாக இருக்குமோ என்று ஐயம் எழுப்புகிறான்.

" பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும்

புதுவது அன்றோ தோன்று இயல் வாழ்க்கை " - (வரம் தரு காதை – 140 )

என செய்த வினைக்கு ஏற்ப பிறவி உண்டு என்னும் வைதீக மதத்தின் கொள்கையை காப்பியம் முழுவதும் பரப்புகிறான். மாதவி பாடிய கானல் வரிதான் கனகவிசயர் முடியை வெற்றிக்கொண்டது என்னும் நிகழ்கால செய்கைகளின் நோக்கம் குறித்தும் கோவலன் தாய், கண்ணகி தாய், மாதரி போன்றோரின் மறுபிறப்பு குறித்தும் விரிவாகப் பேசுகிறான்.

மாசாத்துவானும், மாநாய்கனும்

மாடலன், கண்ணகி மற்றும் கோவலனுக்கு நேர்ந்ததை அவர்களின் பெற்றோரிடம் தெரிவிக்க மாசாத்துவானும், மாநாய்கனும் ஆசிவகம் என்னும் சமயத்தைத் தழுவுகின்றனர். சமண மதத்தின் ஒரு பிரிவாக விளங்கும் இந்த ஆசீவக மதம்,

" பிறந்த யாக்கை பிறப்பு அற முயன்று

துறந்தோர் தம்முன் துறவி எய்தவும்" - (நீர்ப்படைக் காதை 93-95 )

பிறப்பை அறுப்பதை கொள்கையாகக் கொண்டது. மாநாய்கனும் தனது மாபெரும் செல்வத்தைத் தானம் செய்து துறவு மேற்கொள்கிறான்.

மாதவியும், மணிமேகலையும்

கோவலன் இறந்த செய்தி கேட்ட மாதவி, மணிமேகலையை கணிகையர் துயரம் காண வேண்டாம் என்னும் நோக்கத்தோடு அவளது மலர் குழல் களைந்து அவளை பௌத்த மத துறவியாக்கினாள். தானும் அறவாழ்வை மேற்கொண்டாள்.

"மணிமேகலையை வான் துயர் உறுக்கும்

கணிகையர் கோலம் காணாது ஒழிக என" – மேலது ( 105-107 )

மாங்காட்டு மறையோன்

மதுரைக்குச் செல்லும் கண்ணகிக்கும், கோவலனுக்கும் மூன்று வழிகளைக் கூறும் மாங்காட்டு மறையோன் மூன்று திருக்குளங்களில் நீராடி திருமாலை எண்ணித் துதித்தால்

பிறவியாகிய பெருந்துன்பம் நீங்கும் என்றும் இந்திரன் எழுதிய ஐந்திரம் என்னும் நூலின் பயனடைவர் என்றும் கூறுகிறான். (காடு காண் காதை 125-130) இதனைக் கேட்ட கவுந்தி,

" காமுறு தெய்வம் கண்டு அடி பணிய

நீ போ யாங்களும் நீள்நெறி படர்குதும் " - ( மேலது. 160- 162)

இந்திரன் நூலில் சொல்லப்பட்டக் கருத்துகள் எல்லாம் அருகதேவன் அருளிய பரமஆகமத்தில் உள்ளது. ஆதலின் நீ விரும்பிய கடவுளாகிய திருமாலின் அடி தொழுவாய். நாங்கள் எங்கள் வழியில் மதுரைக்குச் செல்கிறோம் என்கிறாள். இங்கு வைணவ சமயத்தின் அந்தணனாகத் திகழும் மாங்காட்டு மறையோன் மூலமாக திருமாலின் கருத்துகளை கேட்டாலும், கண்ணகி பீடன்று என்று கூறியது போல கவுந்தியடிகளும் நாங்கள் எங்கள் வழியில் செல்கிறோம் என்கிறார். திருமாலின் கருத்துகளை ஏற்காத கவுந்தி, ஆயர் குல பெண்ணான மாதரியிடம் தான் கண்ணகி, கோவலனை அடைக்கலமாகத் தருகிறார். ஆயர் குலத்தில் தீய நிமித்தங்கள் தோன்றியதால் மாதரி குரவைக்கூத்து ஆடுமாறு ஐயையைப் பணிக்கிறாள்.

" சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே

திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே – (ஆய்ச்சியர் குரவை 138- 140)

குன்றக்குரவர்கள்

வேலனை வழிபடும் குன்றக் குரவர்கள் தான் முதன்முதலில் கண்ணகிக்கு கோயில் எழுப்ப வேண்டும் என்ற கருத்தைத் தெரிவிக்கின்றனர். குரவைக் கூத்து ஆடி முருகனையும், கண்ணகியையும் வழிபடுகின்றனர். கொடுங்கோல் ஆட்சியை அழித்ததாலும், தெய்யவங்களே அவளது கணவனைக் காட்டி அவளை வானுலகிற்கு அழைத்துச் சென்றதாலும் தெய்வத்திற்கு நிகராகக் கண்ணகி கருதப்பட்டாள்.

" இவள் போலும் நம் குலத்தோர்

இருந் தெய்வம் இல்லை ஆதலின் " – குன்றக் குரவை ( 10-12)

சாலினி

வேட்டுவர் குலத்தில் தோன்றிய பெண் சாலினி. மதுரைக்கு வரும் கோவலனும், கண்ணகியும் கொற்றைவையை வழிபடும் ஐயைக் கோட்டத்தை அடைகின்றனர். சாலினிக்கு இந்த வேடுவர்கள் மகிஷாசுரனை அழித்த கொற்றவையின் வேடத்தைப் புனைகின்றனர். கொற்றவை சாலினி மீது வந்து, கண்ணகி தெய்வமாவாள் என்பதை முன்னரே எடுத்துரைக்கிறது.

" ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய

திருமா மணி எனத் தெய்வம் உற்று உரைப்ப" - ( வேட்டுவ வரி – 45-50)

அப்போது அதனை ஏற்காத கண்ணகி இவள் மயக்கத்தால் ஏதோ பிதற்றுகிறாள் என்கிறாள்.

முடிவுரை

இக்காப்பியம் முழுக்க, சைவம், வைணவம், ஆசிவகம், சமணம், பௌத்தம் போன்ற சமயங்களின் கொள்கைகளும், கடவுளர்களின் சிறப்புகளும் எடுத்துரைக்கப் படுகின்றன. ஆனால் யாரும் தனது சமயக் கொள்கையை மற்றவர் மீது திணிக்கும் நோக்கத்தையோ என் மதமே மேலானது என்று பறைச்சாற்றும் செய்கையையோ கொண்டிருக்க வில்லை. அனைத்து மதங்களும் , மக்களை நல்வழிப்படுத்தும், அறக்கருத்துகளையே உள்ளடக்கியுள்ளன. அந்த வகையில் சிலப்பதிகாரம் சமயங்களின் அருங்காட்சியகமாக விளங்கினாலும், சமயப்பொறை கொண்டு தனிச்சிறப்புடன் விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. மதங்களால் மதம் பிடித்து வாழும் தற்காலத்தில் சிலம்பின் சமயப்பொறை பெருமகிழ்ச்சியை அளிக்கிறது.

துணை நூற் பட்டியல்

1. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரையும், உ.வே.சா நூல் நிலையம், சென்னை 2013.

********* ********* ********** ********* ********* ********** ********** **********